RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 167 | ஜூன்.24 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# 'தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்' செப்.15ல் தொடக்கம்: ஆண்டுக்கு ரூ.755.83 கோடி ஒதுக்கீடு

சென்னை: ஜூன்.24-

அரசு மருத்துவ மனைகளில் பிறக்கும் குழந்தைகள் பயன்பெறும் 'தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை' அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று தமிழகம் முதல்வர் விஜய் தொடங்கி வைப்பார் என்று அரசு தெரிவித்துள்ளது. இந்தத் திட்டத்துக்காக ஆண்டுதோறும் ரூ.755.83 கோடி நிதியை ஒதுக்கீடு செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழ்நாடு முதல்வரின் தலைமையில், வெற்றித் தமிழகம் தொலைநோக்கு திட்டங்களுக்கு (Vetri Thamizhagam vision document) தமிழ்நாடு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில் மிகவும் முக்கியமான திட்டம் "தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்".

அரசு மருத்துவ மனைகளில் பிரசவிக்கும் ஒவ்வொரு குழந்தையையும், மற்றும் பிரசவித்த தாயையும் கவுரவிக்கும் முகமாக "தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்" வடிவமைக்கப்பட்டு இன்று, இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.



தமிழ்நாடு அரசு தாய் சேய் நலனை மேம்படுத்துவதற்கு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி, இலவச பிரசவம் மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தை பராமரிப்பு சேவைகள், அவசர மகப்பேறு சிகிச்சை, ஊட்டச்சத்து அளித்தல், பிரசவத்திற்காக மருத்துவமனையை திட்டமிடும் முறை மற்றும் கர்ப்பிணி மற்றும் குழந்தைகள் கூட்டு கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு மென்பொருள் (PIC-ME) உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு இம்முயற்சிகள் மாநிலத்தில் தாய் சேய் நலக் குறியீடுகளை குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தியுள்ளன.

அரசு மருத்துவ மனைகளில் பிரசவிக்கும், தமிழ்நாட்டில் நிரந்தரமாக வசிக்கும் குடும்பங்களை சார்ந்த தாய்மார்களின் குழந்தைகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ் ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்படும்.

தமிழர் பாரம்பரியத்தில், "தாய்மாமன் சீர்" என்ற மரபின்படி, தமிழ்நாடு முதலமைச்சர், தாயின் சகோதரர் புதிதாகப் பிறந்த குழந்தையை வரவேற்று வாழ்த்தும் வகையில் தங்கம் உள்ளிட்ட பரிசுகளை வழங்கும் விதமாகவும், தமிழர் பண்பாட்டு மரபை பிரதிபலிக்கும் வகையிலும், அரசு ஒவ்வொரு குழந்தைக்கும் தாய்மாமனின் பங்கை ஏற்று, அன்பும் அக்கறையும் நிறைந்த வரவேற்பின் அடையாளமாக ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்பட உள்ளது.

தமிழ்நாடு அரசின் சுகாதாரச் சேவைகளில் மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தும் நோக்கிலும், அரசு மருத்துவ மனைகளில் பிறக்கும் குழந்தையின் பிறப்பை நினைவுகூரும் வகையிலும், தாய்மையின் மகிழ்ச்சி மற்றும் முக்கியத்துவத்தை கொண்டாடும் வகையிலும் "தாய்மாமன் தங்க மோதிரத் திட்டம்" செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தை மாநிலத்தில் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் ரூ.755.83 கோடி நிதியை ஒதுக்கீடு செய்கிறது. இத்திட்டற்கான ஒப்பந்த புள்ளிகள் உடனடியாக கோருவதற்கு தமிழ்நாடு முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இத்திட்டத்தின் கீழ், 22 ஜூன் 2026 முதல் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகள் பயன்பெறுவார்கள். "தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்" அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் 15, 2026 அன்று முதல்வர் விஜய் துவக்கி வைப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "சினிமாவில் நடிப்பது போலவே பேரவையிலும்" முதல்வர் விஜய் மீது நயினார் நாகேந்திரன் தாக்கு

சென்னை, ஜூன்.24-

"முதல்வர் விஜய் இனிமேலாவது தனது தகுதியை அறிந்து, அதற்கான சட்டப்பேரவை மரபோடு நடந்துகொள்ள வேண்டும்" என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "அமைச்சர் நிர்மல் குமார் சட்டம் படித்து இருக்கிறாரா என்று எனக்குத் தெரியவில்லை. திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்ற வேண்டும் என உயர் நீதிமன்ற நீதிபதியின் உத்தரவை நிறைவேற்ற முடியாது என கூறினால், அரசியலமைப்பின்படி அவர் சட்டமன்ற உறுப்பினராக மட்டுமில்லாமல் அமைச்சராக கூட நீடிக்க தகுதி இல்லாத நபர்.

தவெகவைப் போல, பாஜக சாதாரண கட்சி கிடையாது. இனி எத்தனை தேர்தல்கள் வந்தாலும் பாஜக தான் நாட்டை ஆளப்போகின்ற கட்சி. தவெக அடுத்த தேர்தலில் இருக்குமா, இருக்காதா எனத் தெரியவில்லை.

சட்டப்பேரவையில் அதிகமாக பேசி வருவது நமது முதல்வர்தான்; அதிகமாக பேசி பதிலுரை கொடுத்து வருகிறார். சட்டப் பேரவையில், சட்டமன்ற உறுப் பினர்களின் ஒரு கேள்விக்கு கூட முதல்வர் பதில் சொன்னது கிடையாது. அப்படிப்பட்ட முதல்வரின் அமைச்சரவையில்தான் அமைச்சராக நிர்மல் குமார் இருக்கிறார்.

நிர்மல் குமார் பாஜகவில் இருந்தார்; அதன்பிறகு அதிமுகவுக்கு சென்றார். இப்போது தவெகவில் இருக்கிறார். அடுத்த வருடம் வேறு எந்த கட்சிக்கு செல்வார் என தெரியாது.

முதல்வராக பதவி ஏற்க ஆளுநர் மாளிகைக்கு எத்தனை முறை சென்றீர்கள்? நிர்மல் குமார், நீங்கள் சட்டம் படித்தவர்தானே... முதல்வரை பதவி ஏற்க விடுங்கள் என யாருக்கெல்லாம் நீங்கள் போன் செய்து சொன்னீர்கள் என்பதை நான் சொல்லட்டுமா? அப்போது மட்டும் பாஜக இனிக்கிறதா?

சட்டம் சரியாக படிக்கவில்லை; சரியாக எழுத தெரியவில்லை என்று தான் ஆளுநர் திருப்பி அனுப்பினார்.

சட்டப் பேரவையில் தேவையான விஷயங்களை மட்டும் பேசுங்கள். கடந்த ஆட்சியில் மின்வெட்டு பிரச்சினைக்கு அணில் வந்தது என சொன்னார்கள்; தற்போது குரங்கு வந்தது என்று சொல்கிறார்" என்றார்.

முதல்வர் விஜய் இன்று சட்டப்பேரவையில் செய்த சைகை குறித்து கேள்விக்கு பதிலளித்த அவர், "முதல்வர் விஜய் சினிமாவில் நடிப்பது போலவே நினைத்துக் கொண்டு சட்டப்பேரவையிலும் இருக்கிறார்.

சட்டமன்ற மரபுப்படி இவ்வாறு செய்கைகளை காட்டக் கூடாது; இதுபோன்று முன்பு செய்தவர்களின் நிலை என்ன ஆனது என்பதும் உங்களுக்கு தெரியும். இனிமேலாவது முதல்வர் தனது தகுதியை அறிந்து, அதற்கான சட்டப்பேரவை மரபோடு நடந்து கொள்ள வேண்டும்" என்று அவர் கூறினார்.



■ மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், கொடிக்குளம் ஊராட்சி, வெளவால்தோட்டம் கிராமத்தில் ரூபாய். 5 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் நாற்றாங்கால் பண்ணையில் நடவு செய்து வளர்க்கப்பட்டு வரும் செடிகளின் ரகங்கள் மற்றும் விற்பனை குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## "சட்டப்பேரவையில் விசில் அடிக்கிறார்கள்; 10 ரீல்ஸ் தேறும்" முதல்வர் விஜய்க்கு உதயநிதி கண்டனம்

சென்னை: ஜூன்.24-

"சட்டப்பேரவையில் இன்றைக்கு முதல்வர் விஜய் 30 நிமிடம் பேசி இருக்கிறார். அதில் ஒரு 10 ரீல்ஸ் தேறும். திட்டமிட்டு தான் இதை, அவர்கள் செய்கிறார்கள். இவையெல்லாம் எதிர்பார்த்ததுதான். ஒரு கட்டத்துக்கு மேல் பொறுத்துக் கொள்ள முடியவில்லை,," என எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.



ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து இன்று சட்டப்பேரவையில் பேசிய முதல்வர் விஜய், திமுக ஆட்சி மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்ததால் அவையில் கடும் அமளி ஏற்பட்டது. முதல்வர் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

பின்னர், உதயநிதி ஸ்டாலின் செய்தியாளர்களிடம் பேசும்போது, "முதல்வர் விஜய், வழக்கம்போல சினிமா பாணியில் தனக்கு வழங்கப்பட்ட ஸ்கிரிப்டை பேசிக் கொண்டிருந்தார். பின்னர், உண்மைக்கு புறம்பான செய்திகளை சட்டப்பேரவையில் பதிய வைக்க ஆரம்பித்தார்.

தொடர்ந்து பத்திரிகையாளர்களும் முதல்வரிடம் கேள்வி கேட்க எவ்வளவோ முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்; ஆனால் அவர் உங்களுக்கும் பதில் சொல்வது கிடையாது. அதேபோல சட்டப்பேரவையில் எங்களுக்கும் பதில் சொல்வது கிடையாது.

மக்களின் கேள்வியைத் தான் நாங்கள் கேட்கிறோம். முதல்வராக அவர் மக்களின் கேள்விக்கு பொறுப்பாக பதிலளிக்க வேண்டும். எதற்கெடுத்தாலும் திமுகவின் மீது பழி போடுவதை வழக்கமாக வைத்துள்ளார்.

ஆளுநர் சட்டப்பேரவைக்கு வரும்போது முதலில் தமிழ்த்தாய் வாழ்த்தும், இறுதியில் தேசிய கீதமும் பாடப்பட வேண்டும்; இதுதான் மரபு. ஆனால் இந்த முறை மரபு மீறப்பட்டிருக்கிறது. இது குறித்து கேள்வி எழுப்பினேன்; இதில் என்ன தவறு என கேட்கிறார்கள். அது தவறு கிடையாது; வாழ்த்துகள்.

தமிழ்த்தாய் வாழ்த்தை இரண்டு அல்லது மூன்று முறையோ ஒலிக்க வைக்க வேண்டியதுதானே என கேள்வி எழுப்பினேன். இந்த விவகாரத்தில் ஆளுநரும், நீங்களும் என்ன சமரசம் செய்து கொண்டீர்கள் என கேள்வி எழுப்பினேன். அதற்கு எந்தவித பதிலும் கிடையாது. ஒரு புரோட்டாகால் கூட முதல்வருக்கு தெரியாதது வருத்தமளிக்கிறது. குடியரசுத் தலைவருக்கு தனி புரோட்டாகால் உள்ளது; அது ஆளுநருக்கு கிடையாது.

'நான் முதல்வன்' திட்டத்தில் 41 லட்சம் மாணவர்கள் பல சாதனைகளை புரிந்துள்ளார்கள். அந்த திட்டத்தை ஏன் முடக்கினீர்கள் என கேள்வி எழுப்பினேன் அதற்கு அவர்கள் இஷ்டத்துக்கு ஆதாரம் இல்லாமல் முறையற்ற குற்றச்சாட்டுகளை வைத்தனர்.

மின்வெட்டு தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மீண்டும் அவகாசம் கேட்கிறார்கள்; அதையும் திமுக மீது பழி போட்டுவிட்டனர். எந்த விதமான கேள்விக்கும் தெளிவான பதில் கூறவில்லை.

பயிர்க் கடன் தள்ளுபடி குறித்து கேட்டதற்கு, விவசாயிகளை திமுக தூண்டி விடுகிறது என முதல்வர் தெரிவித்துள்ளார். விவசாயிகளின் போராட்டத்தை முழுமையாக கொச்சைப் படுத்தியிருக்கிறார்.

யார் தயவுடனுடம் ஆட்சி அமைக்கவில்லை என முதல்வர் விஜய் சொல்கிறார்; பின்னர், அதிமுகவின் ஒரு பிரிவை மட்டும் ஏன் பார்க்கச் சென்றார். 'பீரோ புல்லிங்' போல, அதிமுக எம்எல்ஏக்கள் இன்றைய அரசு இழுத்துக் கொண்டிருக்கிறது. இதை கேட்டதற்கு எந்த பதிலும் இல்லை.

சினிமா ஸ்பாட்டுக்கு ஒருவர் வந்து எப்படி, டயலாக்கை மனப்பாடம் செய்துவிட்டு, நடித்துவிட்டுச் செல்வாரோ, அதே போல இன்று முதல்வர் செய்திருக்கிறார். சட்டப்பேரவையை சினிமா தியேட்டர் போலவே ஆக்கிவிட்டனர்; சட்டப்பேரவையில் இன்றைக்கு விசில் எல்லாம் அடிக்கிறார்கள். இதெல்லாம் இந்தச் சபை பார்காதது.

இனிமேல் அமைச்சர் ஒருவர் பாடல் எல்லாம் போட்டு, ஆட ஆரம்பித்து விடுவார் என நினைக்கிறேன். சட்டப்பேரவையில் இன்றைக்கு முதல்வர் விஜய் 30 நிமிடம் பேசி இருக்கிறார். அதில் ஒரு 10 ரீல்ஸ் தேறும். திட்டமிட்டு தான் இதை, அவர்கள் செய்கிறார்கள். இவையெல்லாம் எதிர்பார்த்ததுதான். ஒரு கட்டத்துக்கு மேல் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

முதல்வர் செயற்கையாகப் பேசுகிறார்; அவர் நடிக்க ஆரம்பித்துவிட்டார். சபாநாயகரிடம் ஆக்ஷன், கட் எல்லாம் கேட்பார் போல. கேரவன் கூட இனி வந்துவிடும் என நினைக்கிறேன்.

ஊழல் செய்ததாக சொன்னால் நீதிமன்றத்துக்குச் செல்லுங்கள்; பொத்தாம் பொதுவாக பொதுக்கூட்டம், பிரசார மேடைகளில் பேசுவது போல சட்டப்பேரவையில் பேச முடியாது. டைக்ரக்டராக சபாநாயகர் இருக்கிறார். உதவி இயக்குநராக அமைச்சர்கள், துணை சபாநாயகர் இருக்கிறார்கள்.

நேற்று நான் பேசிமுடித்ததும் அவை முடிந்தது என சபாநாயகர் கூறினார். பின்னர் நாங்கள் வீட்டுக்கு சென்று டிவியை பார்த்தால் ஒரு அமைச்சர் இன்னமும் பேசிக்கொண்டிருந்தார். இப்படி காமெடி டைமாக சபையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

முதல்வர் விஜய், 'நிணீகூஷீமீஹ் யீஓஸ்ஸீபீ' என கூறுகிறார். அது எந்த பார்ட்டி என தைரியம் இருந்தால் கூறுங்கள். அதை எதிர்கொள்ள நாங்கள் தயாராக உள்ளோம். எதையும் ஆதாரத்தோடு கூறுங்கள். நான் நேற்று சட்டப்பேரவையில் பல்வேறு கேள்விகளை எழுப்பினேன்; ஆனால் அதற்கு அவர் வாய் திறக்கவில்லை. ஆனால் இன்று அனைத்து டயலாக்கையும் ஒப்பித்திருக்கிறார்.

திமுகவின் திட்டங்கள் தொடர்ந்து கொண்டிருக்கிறது. 'தமிழ் புதல்வன்', 'புதுமைப்பெண்' திட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

தவெகவின் தேர்தல் வாக்குறுதிகள் குறித்து அவர்கள் எதுவும் பேசவில்லை. இந்த ஆட்சி கேலிக்கூத்து ஆட்சியாக உள்ளது" இவ்வாறு அவர் தேரிவித்துள்ளார்.

## மாநகராட்சி வாட்ஸ்அப் செயலியில் 44 சேவைகள்; 10 மாதங்களில் 1.86 லட்சம் பேர் பயன்

சென்னை, ஜூன்.24-

வாட்ஸ்அப் செயலியில் வழங்கப்படும் 44 விதமான சேவைகளை இதுவரை 1.86 லட்சம் பேர் பெற்று பயன் அடைந்திருப்பதாக சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் வழங்கப்படும் அத்தியாவசிய சேவைகளை பொதுமக்கள் எளிதில் பெறுவதற்கு ஏதுவாக கடந்த 2025ம் ஆண்டு ஆகஸ்ட் 25ம் தேதி வாட்ஸ்அப் செயலி சேவை புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டது.

அதன்படி, பொதுமக்கள் மாநகராட்சியின் 94450 61913 என்ற வாட்ஸ்அப் எண்ணுக்கு பிவீ அல்லது வணக்கம் என்ற குறுஞ்செய்தி அனுப்பி தமிழ், ஆங்கிலம் உள்பட 12க்கும் மேற்பட்ட மொழிகளில் 44 வகையான சேவைகளை எளிதில் பெறலாம்.

இந்த வாட்ஸ்அப் செயலி மூலம் சொத்து வரி, தொழில் வரி, வணிக வரி, வணிக வளாக வாடகை, குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டணங்கள் செலுத்துதல், வணிக உரிமம் மற்றும் விளம்பரப் பேனர்கள் உரிமம், முதல்வர் படைப்பகம், மெரினா நீச்சல் குளம், சமூகக் கூடம், ரிப்பன் கட்டிடத்தில் மரபு நடைபயணம், வீடு தோறும் தேவையற்ற சோபா மற்றும் மெத்தை கழிவுகள் பெறுதல், கட்டிடம் மற்றும் கட்டுமானக் கழிவுகள் உள்ளிட்ட சேவைகளுக்கான முன்பதிவுகள், கட்டிட வரைபடத்துக்கான நகர திட்டமிடல், பிறப்புஇறப்புச் சான்றிதழ் பதிவிறக்கம் செய்தல், குழந்தையின் பெயர் சேர்த்தல், புகார் தெரிவித்தல் மற்றும் தகவல் சேவைகள் உள்ளிட்ட சேவைகள் வழங்கப்படுகின்றன.தடையற்ற சேவையை வழங்க, இந்த தளம் செயற்கை நுண்ணறிவை (ஏஐ) நேரடிப் பணியாளர் உதவியுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

இதன் வாயிலாக சிக்கலான கோரிக்கைகள் விரைவான தீர்வுக்காக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்படுகின்றன. இந்த வாட்ஸ் அப் செயலியை பொதுமக்கள் 24 மணிநேரமும் தொடர்பு கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் காகிதமில்லா பயன்பாட்டை சாத்தியமாக்குவதோடு, மக்களுக்கு தாமதமின்றியும், எவ்வித அலைச்சலுமின்றியும் எளிதாக சேவைகளை பெற முடிகிறது.

இந்த வாட்ஸ்அப் செயலி சேவை பொதுமக்களிடம் பெரும் வரவேற்பை பெற்று ஒரு டிஜிட்டல் சேவைத் தளமாக செயல்பட்டு, 2.14 லட்சத்துக்கும் அதிகமான பயனர்கள் பதிவு செய்து பயன்படுத்தி வருகின்றனர்.

இதில் 1.86 லட்சத்துக்கும் அதிகமானோர் தங்களுக்குத் தேவையான சேவைகளை பெற்று பயனடைந்துள்ளனர். மேலும், ஒருங்கிணைந்த கட்டணச் சேவைகள் மூலமாக ரூ.43.76 கோடி வருவாய் மாநகராட்சிக்கு கிடைத்துள்ளது.

பொதுமக்கள் மாநகராட்சியின் இந்த வாட்ஸ்அப் செயலியை பயன்படுத்தி தேவையான சேவைகளை பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை புதிய பேருந்து நிலையத்தில் பெண்கள் கழிப்பறைக்கு செல்லும் வழிப்பாதையில் இருசக்கர வாகனங்கள் ஆக்கிரமித்து நிறுத்தப்படுவதால் பெண்கள் அவதியடைந்து வருகின்றனர்.இதனால் கழிப்பறைக்கு செல்லும் பொதுமக்கள், குறிப்பாக பெண்கள் சிரமத்திற்குள்ளாகி வருவதாக கூறப்படுகிறது. ஆக்கிரமித்து நிறுத்தப்பட்டுள்ள இருசக்கர வாகனங்களை அகற்றி, பாதையை சீரமைக்க நகராட்சி நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெண்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# முதலமைச்சர் விஜய் பிறந்தநாள் கால்பந்து போட்டி நடைபெற்றது

## மாசெ. முத்துபாரதி. எக்ஸ் எம்எல்ஏ. இராஜசேகரன். பங்கேற்பு

சிவகங்கை, ஜூன்.24-

முதலமைச்சர் ஜோசப் விஜயின் பிறந்தநாளை முன்னிட்டு சிவகங்கை மாவட்டம் முழுவதும். தவெக நிர்வாகிகள் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் அன்னதானம். நலத்திட்ட உதவிகள் வழங்குதல் . விளையாட்டு போட்டிகள் . ஆகியவற்றை நடத்தி பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்...அந்த வகையில் சிவகங்கை தவெக பிரமுகரும் சமூக ஆர்வலருமான சிவகங்கை கல்பணா சபேசன் ஏற்பாட்டில் மாநில அளவிலான சிறுவர்கள் கால்பந்தாட்ட போட்டியை நடத்தி தவெகவினர் முதலமைச்சர் பிறந்தநாள் விழாவினை சிறப்பாக கொண்டாடினர்.இப்போட்டியினை சிவகங்கை தவெக தெற்கு மாவட்ட செயலாளர் முத்துபாரதி . சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இராஜசேகரன் ஆகியோர் கலந்து கொண்டு தொடங்கி வைத்தனர்...இந்த போட்டியில் சிவகங்கை. மதுரை. காரைக்குடி. இளையான்குடி ஆகிய பகுதிகளிலிருந்து பள்ளி சிறுவர்கள் கலந்து கொண்டு வெற்றிக் கோப்பையினைத் தட்டிச் சென்றனர்...இந்த நிகழ்ச்சியின் போது மூத்த முன்னோடி துரைகருணாநிதி . சிவாஜி ரசிகர் மன்றத்தலைவர் தமிழரசன். செல்வரெங்கன் மற்றும் பயிற்றுனர்கள் லெணின் . சிக்கந்தர் . சிவனேசன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்...நிகழ்ச்சி ஏற்பாடுகளை தவெக பிரமுகர் சிவகங்கை கல்பணா சபேசன் சிறப்பாக செய்திருந்தார்...





# திருப்புவனத்தில் பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் அன்னதானம் வழங்கல்

சிவகங்கை, ஜூன்.24-

சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் சி. ஜோசப் விஜயின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழகம் சார்பில் பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மாவட்ட செயலாளர் முத்துபாரதி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சி, ஜூன் 22 மாலை 6 மணியளவில் திருப்புவனம் பேரூரில் நடைபெற்றது. இதில் பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.நிகழ்ச்சியில் மாவட்ட, சார்பு அணி, ஒன்றிய, நகர, பேரூர், கிளை மற்றும் பூத் கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இவ்விழாவை தமிழக வெற்றி கழக திருப்புவனம் செயற்குழு உறுப்பினர் சசிகுமார் ஏற்பாடு செய்திருந்தார்..

# தேவகோட்டை கிளை தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், மாதாந்திர கூட்டம்



தேவகோட்டை, ஜூன்.24-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் தேவகோட்டை கிளையின் மாதாந்திரக் கூட்டம் தலைவர் மருத்துவர் இரா. தா. கணியன் பூங்குன்றன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு கிளையின் செயற்குழு உறுப்பினர் மருத்துவர் கா. செந்தில்குமார் வரவேற்புரை வழங்கினார். இயக்குனர் இமயம் பாரதிராஜா அவர்களுக்கு புகழ் வணக்க அஞ்சலி கவிதைகளை கவிஞர் அரவரசன், கவிஞர் பிரைட், கவிஞர் அ.சந்திரன் ஆகியோர்கள் படைத்தார்கள். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சிவகங்கை மாவட்டத் தலைவர் பேராசிரியர் பழனியப்பன் கலந்து கொண்டு இயக்குனர் இமயம் பாரதிராஜா அவர்களின் காட்சிப்புலக் கருத்துக்களை எடுத்துரைத்தார். “என் இனிய தமிழ்மக்களே” என்னும் தலைப்பில் இயக்குனர் பாரதிராஜா அவர்களுக்கு அஞ்சலி உரையாக காரைக்குடி இராமநாதன் செட்டியார் உயர்நிலைப் பள்ளியின் தமிழாசிரியர் முனைவர் கா.செந்தில்குமார் பேசுகையில், நாம் இங்கே கூடியிருப்பது ஒரு மனிதரின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்க அல்ல; தமிழ் சினிமாவின் முகவரியை மாற்றியெழுதிய ஒரு சகாப்தத்திற்குப் புகழ் வணக்கம் செலுத்த திரையரங்கின் நான்கு சுவர்களுக்குள், செயற்கை வெளிச்சத்தில் முடங்கிக் கிடந்த தமிழ் சினிமாவை, கிராமத்து மண்பாதைகளுக்கும், நெல் வயல்களுக்கும், ஓடைக்கரைகளுக்கும் கூட்டிச் சென்றவர் நம் இயக்குனர் இமயம் பாரதிராஜா, தமிழ் சினிமா ‘ஸ்டுடியோ’க்களை மட்டுமே நம்பியிருந்த காலத்தில், கேமராவைத் தூக்கிக்கொண்டு கிராமத்து மண்ணில் கால் பதித்தார். மாடு செத்தா மாட்டுத் தோல்... மனுஷன் செத்தா?" என்று பாலுதேவர் பேசும் ஒரு வசனம், நூறு மேடைப் பேச்சுகளுக்குச் சமம். சாதி என்பது பிறப்பால் வருவதல்ல, சிந்தனையால் வருவது என்பதை ‘பாலுதேவர்’ மற்றும் ‘சங்கரன்’ பாத்திரங்கள் மூலம் மிக ஆணித்தரமாக உணர்த்தினார். சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் விட மனிதநேயமே பெரிது என்பதை உரக்கச் சொன்னார். பாரதிராஜா அவர்கள் உடலால் நம்மை விட்டுப் பிரிந்திருக்கலாம். ஆனால், அவர் தமிழ் மண்ணில் விதைத்த ‘மண்வாசனை’, தமிழ் சினிமா இருக்கும் வரை, தமிழினம் வாழும் வரை மாறாது. தமிழ் சினிமாவின் இலக்கணத்தை மாற்றியமைத்த அந்தப் ‘புதுமைப் பித்தன்’, ‘வேதம் புதிது’ செய்த மாமேதை, நம் ‘இயக்குனர் இமயம்’ பாரதிராஜா அவர்களின் நினைவுகள் என்றும் தமிழ் மண்ணில் நீங்கா இடம் பிடித்திருக்கும். நிறைவாக கிளையின் செயலாளர் முனைவர் கோ.தர்மராஜ் நன்றி உரை கூறினார். கிளையின் பொருளாளர் இரா.மேகலா முருகன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்டச் செயலாளர் முனைவர் கரு முருகன். தோழர் காமராஜ், மருத்துவர் ஜெயக்குமார், பேராசிரியர் கார்த்திக், பேராசிரியர்கள் முனைவர் வெண்ணிலா, ஆசிரியர் சங்கீதா மற்றும் பல கிளை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



# சேம்பார் நடுநிலைப்பள்ளியில் செஸ் போட்டி



காளையார் கோவில், ஜூன்.24-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஒன்றியம் சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சதுரங்க போட்டி நடைபெற்றது. தலைமை ஆசிரியர் சுரேஷ் தலைமை வகித்தார். பட்டதாரி ஆசிரியர் காளீஸ்வரன் முன்னிலை வகித்தார். ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய மாணவர்களுக்கு சென்ற வாரம் சதுரங்கம் எவ்வாறு விளையாடுவது என்ற பயிற்சி மாணவர்களுக்கு தலைமை ஆசிரியர் சுரேஷ் அவர்களால் வழங்கப்பட்டது. ஸ்மார்ட் டிவியில் வீடியோக்கள் ஒளிபரப்பு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சேம்பர் நடுநிலைப்பள்ளியில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை ஒரு பிரிவாகவும் 6 முதல் 8 வகுப்பு வரை மற்றொரு பிரிவாகவும் போட்டிகள் நடைபெற்றன. ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் 12 பேரும் 6 முதல் 8 மாணவர்கள் 20 பேரும் கலந்து கொண்டனர். ஆறு முதல் எட்டாம் வகுப்பு மாணவர்கள் பிரிவில் வெற்றி பெற்று முதல் இடத்தை மாணவன் முகேஷ் இரண்டாவது இடம் டார்வின் தாவீது பெற்றனர். மூன்று மற்றும் நான்காம் இடம் முறையே மகதி ,அருள் ஜோஸ்வின் வெற்றி பெற்றனர். ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான போட்டியில் முதலிடம் ஆர்வின் இரண்டாம் இடம் செலினா மூன்றாம் இடம் ஜோய் வின் வெற்றி பெற்றனர். அனைத்து போட்டிகளையும் தலைமையாசிரியர் சுரேஷ் மற்றும் ஆசிரியர்கள் காளீஸ்வரன், முத்துக்குமார், முருகன், சகாய செல்வி, பாரதி மலர், தனபாக்கியம் ஆகியோர் நடத்தினார். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

# வண்டலூரில் தூய்மை பணியாளர்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கிய செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் தியாகராஜன்



வண்டலூர், ஜூன்.24-

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட வண்டலூர் ஊராட்சியில் தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் 52 வது பிறந்த நாளை ஒட்டி செங்கல்பட்டு மத்திய மாவட்ட தமிழக வெற்றி கழக சார்பில் வண்டலூர் ஜிஎஸ்டி சாலையில் அமைந்துள்ள இரணியம்மன் கோவிலில் செங்கல்பட்டு எம்எல்ஏவும் செங்கல்பட்டு மத்திய மாவட்ட கழகச் செயலாளர் தலைமையில் சிறப்பு பூஜை அபிஷேக வழிபாடு நடைபெற்றது அதனைத் தொடர்ந்து ஊராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதான வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இந்த நிகழ்ச்சிக்கு செங்கல்பட்டு மத்திய மாவட்ட செயற்குழு உறுப்பினர் வண்டலூர் வி சந்திரசேகர் என்கின்ற விஜயராஜ் தலைமை தாங்கினார் விழாவில் செங்கல்பட்டு எம்எல்ஏ தியாகராஜன் தூய்மை பணியாளர்களுக்கு சீருடை மற்றும் நலத்திட்ட உதவிகள் மற்றும் 500 பேருக்கு அன்னதானம் வழங்கினார் இதில் அப்பு, அஜித், ஜெய்னுல், பாலாஜி, நந்தா, சதீஷ் சரவணன் மற்றும் ஏராளமான தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்




# டெபாசிட் செய்த பணத்தை மீட்டுத் தரக் கூறி பத்துக்கும் மேற்பட்டோர் நீலகிரி மாவட்ட ஆட்சியரிடம் மனு

நீலகிரி, ஜூன்.24-

நீலகிரி மாவட்டத்தில்ரமேஷ் என்பவர் SMC என்ற கூட்டுறவு சொசைட்டி நிறுவனத்தை நடத்தி வந்ததாகவும் அதில் மாத வட்டி தருகிறோம் என வெளிவந்த விளம்பரம் மூலம் அறிந்து உதகை கிளையில் தலைவரான சதாசிவம் என்று அழைக்கப்படும் ரமேஷ் என்பவரிடம் பணத்தை டெபாசிட் செய்ததாகவும் ஆனால் தற்போது வரை தங்கள் டெபாசிட் செய்த பணத்தை திரும்ப தரவில்லை எனவும் ஆதலால் மாவட்ட நிர்வாகம் தலையிட்டு தங்களது பணத்தை பெற்று தர வேண்டும் என கூறி பாதிக்கப்பட்ட 10க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளித்தனர்.



■ மதுரை மாநகராட்சி பெரியார் பேருந்து நிலையத்தில் தூய்மை பணிகள் குறித்து மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் அருகில் மாநகர்நல அலுவலர் மரு.அர்விந்த் ஜோதி , உதவி செயற்பொறியாளர்முத்து மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



■ மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், புதுத்தாமரைப்பட்டி ஊராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் நிதியின் கீழ் ரூபாய். 14 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் சமுதாயக் கூடம் கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா ஆய்வு செய்து பார்வையிட்டார்.உடன் திட்ட அலுவலர்வானதிஉதவிபொறியாளர் சுகன்யா ஆகியோர் உள்ளனர்.

# குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் மற்றும் தொழிலாளர் உதவி ஆய்வாளர் ஆகியோருடன் தேனி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கூட்டாய்வு



தேனி, ஜூன்.24-

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தேனி மாவட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் மற்றும் வளரிளம் பருவத்தொழிலாளர்களை தொழிற்சாலைகள் / வணிக நிறுவனங்களில் பணியமர்த்துவதை முற்றிலும் ஒழிக்க வேண்டுமென்ற அடிப்படையில், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அவர்களின் தலைமையில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் மற்றும் தொழிலாளர் உதவி ஆய்வாளர் ஆகியோருடன் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கூட்டாய்வு மேற்கொண்டபோது வளரிளம் பருவத்தினர்களை பணியமர்த்திய 02 நிறுவனங்கள் 1986ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர் மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் (ஒழித்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டப்பிரிவு 9 (2) மற்றும் 11 உடன் விதி 16(1) மற்றும் பிரிவு 12 ஆகியவற்றை மீறியிருந்தது கண்டறியப்பட்டது. இது மேற்படி சட்டத்தின் பிரிவு 14(3)(d)-இன் படி தண்டனைக்குரியதாகும். முரண்பாடு கண்டறியப்பட்டு 02 வளரிளம் பருவத்தினர்கள் மீட்கப்பட்ட நிலையில், 1986 குழந்தைத் தொழிலாளர் மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் (ஒழித்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் மற்றும் திருத்தச்சட்டம் 2016இன் கீழ் மேற்படி கடை நிறுவன உரிமையாளர்களுக்கு ஒவ்வொரு முரண்பாட்டிற்கும் தலா ரூ.5000/ வீதம் இரண்டு நிறுவனங்களுக்கு மூன்று முரண்பாடுகளில் ரூ.30,000/ அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.மேலும், குழந்தை மற்றும் வளரிளம் பருவத்தினர்களை வேலைக்கு அமர்த்துவது சட்டப்படி குற்றமாகும். மீறினால் சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், அவர்கள் தெரிவித்துள்ளார்.

# திருப்பாச்சேத்தியில் முதல்வர் பிறந்தநாள் விழா.. துணைச்செயலாளர் விசாலாட்சி ஜெயக்குமார் ஏற்பாட்டில் சிறப்பு பூஜை மற்றும் அன்னதானம்

## ஒசெ. திவாகர் தலைமை. செயற்குழு நல்லமணி முன்னிலை ரம்யா விசாலாட்சி ஏற்பாடு



திருப்பாச்சேத்தி, ஜூன்.24-

சிவகங்கை மாவட்டம் முழுவதும் தமிழ்நாடு முதலமைச்சர் சி. ஜோஸப் விஜயின் 52 வது பிறந்த தினத்தை முன்னிட்டு பொதுமக்களுக்கு இனிப்பு . அன்னதானம். ஏழை எளிய பொதுமக்களுக்கு அரிசி. மளிகைப் பொருட்கள். தையல் இயந்திரம். நலத்திட்ட உதவிகள். புதிதாக பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரங்கள் என தவெக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் வெகு விமரிசையாக கொண்டாடி வருகின்றனர்...

அந்த வகையில் சிவகங்கை மாவட்டம். திருப்புனம் கிழக்கு ஒன்றியம் திருப்பாச்சேத்தி கிராமத்தில் ஒன்றியக்கழக துணைச் செயலாளர் , மிது பியூட்டிஸியன் ரம்யா என்ற விசாலாட்சி ஜெயக்குமார் அவர்களது சொந்த ஏற்பாட்டில் சுமார் முன்னூறுக்கும் மேற்பட்ட ஏழை எளிய பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது... சிவகங்கை தெற்கு மாவட்டக்கழக தவெக செயலாளர் முத்துபாரதி அறிவுறுத்தலின்பேரிலும். திருப்புவனம் கிழக்கு ஒன்றியக்கழக செயலாளர் திவாகர் ஆலோசனையின்படியும் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியை ஒன்றியக்கழக செயலாளர் திவாகர் கலந்து கொண்டு தொடங்கி வைத்தார்... மாவட்ட செயற்குழு உறுப்பினர் நல்லமணி. ஒன்றிய செயற்குழு உறுப்பினர்களான முத்துசாமி. முத்தையா ஆகியோரது முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மகளிரணி நிர்வாகிகளான தமிழ்செல்வி . சிவகாமி . தூதை ப்ரியங்கா . கிளைக்கழக செயலாளர்களான கார்த்திகேயன் . முத்துக்குமார் . மீனாகுமாரி . சங்கர் . காளிமுத்து . ஜெயக்குமார் உள்ளிட்ட தவெக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...முன்னதாக முதலமைச்சர் ஜோசப் விஜய் நீண்ட ஆயுளுடன் வாழவேண்டுமென திருப்பாச்சேத்தி அருள்மிகு அழகிய நாயகி அம்மன் திருக்கோவிலில் சிறப்பு பூஜை மற்றும் வழிபாடுகள் நடத்தப்பட்டு பக்தர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கப்பட்டது...நிகழ்ச்சி ஏற்பாடுகளை திருப்புவனம் கிழக்கு ஒன்றிய தவெக துணைச் செயலாளரும் , மிது பியூட்டி பார்லர் உரிமையாளருமான பியூட்டிஸியன் ரம்யா என்ற விசாலாட்சி ஜெயக்குமார் சிறப்பாக செய்திருந்தார்...

# நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்





தேனி, ஜூன்.24-

தேனி மாவட்ட காவல்துறையினர். பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் இரவு நேரங்களில் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




# சில்ரன்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் மாணவ மாணவிகளுக்கு பாராட்டு விழா

## மாணவமாணவிகளுக்கும்,மற்றும் மாணவ மாணவிகளை ஊக்குவித்த ஆசிரியைகளுக்கும் பாராட்டி கல்வி ஊக்கத்தொகை வழங்கும்நிகழ்ச்சி

மாதவரம், ஜூன்.24-

மாதவரம் தொகுதி செங்குன்றம் அடுத்த பாடியநல்லூர் ஊராட்சி எம்.ஏ. நகரில் இயங்கிவரும் சில்ரன்ஸ் பேரடைஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கும் அதேபோல் 100க்கு 100 மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கும், 10ம் வகுப்பு பொது தேர்வில் 450 மேல் மதிப்பெண்கள் மற்றும் 12ம் வகுப்பு பொது தேர்வில் 550 மேல் மதிப்பெண்கள் பெற்ற மாணவமாணவிகளுக்கும், மற்றும் மாணவ மாணவிகளை ஊக்குவித்த ஆசிரியைகளுக்கும் பாராட்டி கல்வி ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சி பள்ளி தாளாளர் என்.ராஜன் தலைமையில் தலைமையில் நடைபெற்றது.பள்ளியின் முதல்வர் விஜயா முன்னிலை வகித்தார். முன்னதாக மூத்த முதல்வர் சக்திமோகன், முதன்மை நிர்வாக அதிகாரி ரவிகோகுலநாதன் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி யு.சகாயம் கலந்து கொண்டு, 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கும், 100க்கு 100 மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கும், 10ம் வகுப்பு பொது தேர்வில் 450 மேல் மதிப்பெண்கள் மற்றும் 12ம் வகுப்பு பொது தேர்வில் 550 மேல் மதிப்பெண்கள் பெற்ற மாணவமாணவிகளுக்கும், மாணவ மாணவிகளை ஊக்குவித்த ஆசிரியைகள் மற்றும் விடுமுறை எடுக்காமல் பள்ளிக்கு வருகை தந்த மாணவர்கள் உள்ளிட்டோரை பாராட்டி ஊக்கத்தொகையை வழங்கினார். இதில் அகில இந்திய சங்க நர்சரி, தொடக்க மெட்ரிக் மேல்நிலைப் மற்றும் சிபிஎஸ்இ பள்ளிகளின் பொதுச்செயலாளர் முனைவர் பாஷா உள்ளிட்ட மாணவ மாணவிகள், ஆசிரிய ஆசிரியைகள், பெற்றோர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். முடிவில் பள்ளியின் துணை முதல்வர் கோபிநாத் அனைவருக்கும் நன்றி கூறினார்.



# கல்லூரி மாணவர்களுக்கு யோகாசன பயிற்சி வழங்கிய அரசு அருங்காட்சியகம்

கிருஷ்ணகிரி, ஜூன்.24-

கிருஷ்ணகிரி அரசு அருங்காட்சியகத்தில் சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு ஒரு நாள் யோகாசன பயிற்சி வழங்கப்பட்டது.யோகாவின் உடல் மற்றும் மனநல நன்மைகள் குறித்து பயிற்சி மருத்துவ மாணவி ஹேமலதா விளக்கமளித்தார். தொடர்ந்து தாடாசனம், விருக்ஷாசனம், பத்மாசனம், வஜ்ராசனம், சவாசனம் உள்ளிட்ட யோகாசனங்கள் பயிற்றுவிக்கப்பட்டன.

நிகழ்ச்சியில் அரசு கலைக்கல்லூரி வரலாற்றுத்துறை மாணவர்கள் பங்கேற்றனர். காப்பாட்சியர் சிவக்குமார் நோக்கவுரையாற்றிய நிலையில், அருங்காட்சியக பணியாளர்கள் செல்வகுமார், பெருமாள் ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# சென்னை வியாசர்பாடி பகுதியில் மது அருந்துவதற்கு பணம் தராத தாய் மாமனை அடித்துக் கொலை செய்தவர் கைது

சென்னை, ஜூன்.24-

சென்னை வியாசர்பாடி பகுதியில் மது குடிக்க பணம் தராத தாய் மாமனை அடித்துக் கொலை செய்தவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஏரிக்கரை ஹவுசிங் போர்டு குடியிருப்பில் வசித்து வந்த பவித்ரன் (30), பணம் கேட்டு தொந்தரவு செய்து தாக்குதலில் ஈடுபட்டதில் அவரது தாய் மாமன் முருகன் (50) என்பவர் கீழே விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்





# பாடியநல்லூர் சிலம்பாட்ட விழிப்பு உணர்வு நிகழ்ச்சி

மாதவரம், ஜூன்.24-

தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு சிலம்பாட்டக் கழகத் தலைவர் பிரதீப் ஆர். ராஜே தலைமையில் மாநிலம் முழுவதும் நடைபெற்ற சிலம்பாட்ட விழிப்புணர்வு பேரணியின் ஒரு பகுதியாக, திருவள்ளூர் மாவட்ட சிலம்பாட்டக் கழகத் தலைவர் எ ஸ்.வளையாபதி தலைமையில் பாடி யநல்லூர் அருள்மிகு முனீஸ்வரர் அங்காள ஈஸ்வரி ஆலய மைதானத்தில் சிலம்பாட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.திருவள்ளூர் மாவட்ட சிலம்பாட்டக் கழகச் செயலாளர் எஸ்.சிவகுமார் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், மாவட்டத்தின் 40 கிளைகளைச் சேர்ந்த 2,500க்கும் மேற்பட்ட மாணவர்கள், ஆசான்கள் மற்றும் பயிற்சியாளர்கள் பங்கேற்று சிலம்பாட்டக் கலை நிகழ்ச்சிகளை நடத்தி சிறப்பித்தனர். மாவட்ட இணைச் செயலாளர் பகவதி சந்திரசேகரன் மிகச் சிறப்பாக நிகழ்ச்சினை ஒருங்கிணைத்திருந்தார்.

சிலம்பம் வளர்ச்சி, போதை ஒழிப்பு, பெண்கள் பாதுகாப்பு மற்றும் சமூக விழிப்புணர்வை மையமாகக் கொண்டு நடைபெற்ற இந்நிகழ்ச்சி பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.மேலும், தமிழ்நாடு சிலம்பாட்டக் கழகம் சார்பில் தமிழக அரசுக்கு முக்கிய கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. தமிழர்களின் பாரம்பரிய வீரக்கலையான சிலம்பத்திற்கு தமிழக அரசின் முழுமையான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் அதேபோல் சிலம்பம் விளையாட்டை விளையாட்டு ஒதுக்கீட்டில் இணைத்து, மாணவர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் உரிய வாய்ப்புகள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக அரசிடம் வலியுறுத்தப்பட்டது.

# நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்



நீலகிரி, ஜூன்.24-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 210 மனுக்களை பெற்றுக் கொண்டார்.

ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.மேலும், இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறையின் சார்பில், முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 2 நபர்களுக்கு ரூ.1 இலட்சம் (தலா ரூ.50,000/ வீதம்) பெறுவதற்கான ஆணையினையும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் 1 நபருக்கு திருமண நிதியுதவி ரூ.10,000/ பெறுவதற்கான ஆணையினையும், 2 நபர்களுக்கு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை ரூ.80,000/ (தலா ரூ.40,000/வீதம்) பெறுவதற்கான ஆணையினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார் .இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி, மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், மாவட்ட சமூக நல அலுவலர் பிரிவீணா தேவி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ராமசாமி உட்பட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





# தேவகோட்டை இராம்நகர் உலக மீட்பர் ஆலயத்தில் திருவிழா தேர்பவனி

மானாமதுரை, ஜூன் .24-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ராம்நகர் உலக மீட்பர் ஆலயத்தில் திருவிழா தேர்பவனி சிறப்பாக நடைபெற்றது.இந்நிகழ்ச்சி சிவகங்கை மறைமாவட்ட மேனாள் ஆயர் சூசை மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது.இராம்நகர் பங்குத்தந்தை வின்சென்ட் அமல்ராஜ் முன்னிலை வகித்தார்.திருவிழா திருப்பலியில் மேனாள் ஆயர் சூசைமாணிக்கம், பங்குத்தந்தை வின்செண்ட் அமல்ராஜ் இவர்களோடு அருகாமை பங்கில் உள்ள இருபதுக்கும் மேற்பட்ட அருள்பணியாளர்கள் இணைந்து நிறைவேற்றினார்கள்.பின்பு நடைபெற்ற தேர்பவனி ராம்நகர் முதலாவது வீதியில் தொடங்கி எழுவன்கோட்டை ரோடு மற்றும் ராம்நகர் மூன்றாவது வீதி வழியாக வந்து உலக மீட்பர் ஆலயத்தை வந்தடைந்தது.பின்பு இறைமக்கள் அனைவருக்கும் நற்கருணை ஆசிர் வழங்கப்பட்டது.இந்நிகழ்வில் அருட்சகோதரிகள், ராம்நகர் பங்கு இறைமக்கள் மற்றும் கிளைக் கிராம இறைமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதற்கான ஏற்பாடுகளை இராம்நகர் பங்கு பேரவையினர் செய்திருந்தனர்.

# முருகப்பா பள்ளியில் உலக யோகா தின விழா



கல்லல், ஜூன்.24-

சிவகங்கை மாவட்டம் கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் உலக யோகா தின விழா கொண்டாடப்பட்டது. தாடாசனம், பத்மாசனம், புஜங்காசனம், பாலாசனம்,பவனமுக்தாசனம்,விருஷாசனம்திரிகோணாசனம்அர்த்த சக்ராசனம்,வஜ்ராசனம்,பாதஹஸ்தானம் ஆகிய ஆசனங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டது. பள்ளியின் உடற்கல்வி ஆசிரியர் சுப்பிரமணியன் கூட்டு உடற்பயிற்சி மற்றும் யோகாவை மாணவர்களுக்கு செய்து காண்பித்தார். தேசிய மாணவர் படை ஆசிரியர் கண்ணதாசன் மற்றும் காரைக்குடி சங்கமம் அறக்கட்டளையைச் சேர்ந்த சன்முகநாதன் லோகநாதன் சண்முகப் பெருமாள் ஆகியோரும் மாணவ மாணவிகளுக்கு யோகப் பயிற்சிக ளைக் கற்றுக் கொடு த்தார்கள். இதையொட்டி நடைபெற்ற தொடக்க விழாவிற்கு தலைமையாசிரியர் அழகப்பன் தலைமையேற்று யோகாவினால் ஏற்படும் நன்மைகள் குறித்து உரையாற்றினார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மத்திய அரசு வழக்கறிஞரும், உறுதிமொழி ஆணையிருமான முருகேசன் யோகா தினத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கிக் கூறினார். ஆசிரியர்கள் மாரிமுத்து அமுதா கற்பகவல்லி இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட செயலாளரும், இப்பள்ளியின் ஆசிரியருமான பிரபு நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பு செய்தார்.



# சிவகங்கையில் ஐவர் கால்பந்து போட்டி; ஓரத்தநாடு அணி சாம்பியன்

சிவகங்கை, ஜூன்.24-

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜயின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு சிவகங்கை மஜித் ரோட்டில் உள்ள BRK Sports Hub Turf Ground மைதானத்தில் ஐவர் கால்பந்து போட்டி நடைபெற்றது.சிவகங்கை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ். முத்துபாரதி தலைமையில் நடைபெற்ற போட்டியில், சிவகங்கை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ. குழந்தை ராணி நாச்சியார் மற்றும் மானாமதுரை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டி. இளங்கோவன் முன்னிலை வகித்தனர்.தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து அணிகள் பங்கேற்ற இப்போட்டியில் ஒரத்தநாடு சீஙிஸி அகாடமி அணி முதல் பரிசையும், தஞ்சாவூர் அணி இரண்டாம் பரிசையும், புதுக்கோட்டை அணி மூன்றாம் பரிசையும் வென்றன.

போட்டிக்கான ஏற்பாடுகளை எம்.கே. சேதுபதி மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி மண்டல இணை ஒருங்கிணைப்பாளர் ஏ. ஜனார்த்தனன் ஆகியோர் செய்திருந்தனர். நிகழ்ச்சியில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# முதலமைச்சர் பிறந்தநாள் விழா. சிவகங்கை தவெக மாவட்ட மாணவரணி இணைச்செயலாளர் சிவகங்கை சிவா ஏற்பாடு

சிவகங்கை, ஜூன் .24-

சிவகங்கை தெற்கு மாவட்ட தவெக சார்பில் முதலமைச்சர் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்...தவெகவினர் ஏழை. எளிய பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள். அன்னதானம். மருத்துவ முகாம் உள்ளிட்ட நற்காரியங்களை செய்து வருகின்றனர்...அந்த வகையில் சிவகங்கை மாவட்ட தவெக மாணவரணி மாவட்ட இணை அமைப்பாளர் சிவா ஏற்பாட்டில் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது...மாவட்ட செயலாளர் முத்துபாரதி தலைமை தாங்கி பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களை வழங்கிச் சிறப்பித்தார்.சிவகங்கை மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தமறாக்கி பிரபு முன்னிலையில் நடைநெற்ற இந்த நிகழ்ச்சியின்போது நகர மாணவரணி திருசெந்தில்விஜயன். நகர நிர்வாகிகளான மனோ. பாண்டியராஜன். விணோத்குமார். வெங்கடேஷ். முத்துக்கண்ணன். விக்கி. லோகேஷ். நவீன்குமார். கோகுல். உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்...நிகழ்ச்சி ஏற்பாடுகளை சிவகங்கை தெற்கு மாவட்ட தவெக மாவட்ட மாணவரணி இணை அமைப்பாளர் சிவகங்கை சிவா சிறப்பாக செய்திருந்தார்...





# த.வெ.க ஈஞ்சம்பாக்கம்194 வது மேற்கு வட்டம் சார்பில் முதல்வர், சி. ஜோசப் விஜய் 52 வதுபிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் அன்னதானம்

ஈஞ்சம்பாக்கம், ஜூன் .24-

சென்னை புறநகர் மாவட்டம், சோழிங்கநல்லூர் பகுதி ஈஞ்சம்பாக்கம், இ.சி.ஆர், அம்மா உணவகம் எதிரில் தமிழக வெற்றி கழகத்தின் தலைவர்,தமிழக முதல்வர், சி.ஜோசப் விஜய் 52 வதுபிறந்தநாளை முன்னிட்டு, பகுதி செயலாளர், தனசேகரன் தலைமையில் 194 மேற்கு வட்டச் செயலாளர், கோபி முன்னிலையில் கேக் வெட்டி சிறப்பாக கொண்டாடினார்கள். இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்த 194 மேற்கு வட்டம், கே.பாக்யராஜ் மற்றும் வி .தாமஸ் இணைந்து 2052 நபர்களுக்கு சிக்கன் பிரியாணி அருஞ்சுவை விருந்து ஏற்பாடு செய்து நடைபெற்றது. தொடர்ந்து ஈஞ்சம்பாக்கம் அட்வென்ட் கிறிஸ்தவ நடுநிலைப் பள்ளியில் 300 மாணவ ,மாணவிகளுக்கு கேக் மற்றும் அருண்சுவை விருந்து சிக்கன் பிரியாணி வழங்கி கொண்டாடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. விழாவில் தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




# சமூக நீதி அமைச்சர் வன்னியரசு முதல்வரை சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்

சென்னை, ஜூன்.24-

சென்னையில் உள்ள தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் சி. ஜோசப் விஜயை சந்தித்து பிறந்தநாள் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது.

அப்போது, சமீபத்தில் ஒளிபரப்பான தொலைக்காட்சி நேர்காணல் குறித்து முதலமைச்சர் கருத்து தெரிவித்ததாக கூறப்படுகிறது. குறிப்பாக, SOFA MODEL (Social Justice - Organised Action - Freedom - Anti-Caste/Corruption) ஆட்சி குறித்த விளக்கத்தை பாராட்டியதுடன், தொடர்ந்து துறை சார்ந்த பணிகளில் சிறப்பாக செயல்பட வாழ்த்து தெரிவித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

# முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு 10 ஆயிரம் பேருக்கு அன்னதானம்



போடி, ஜூன்.24-

தேனி மாவட்டம் போடி தாலுகாவிற்குட்பட்ட மீனாட்சிபுரம் பேரூராட்சி, துரைராஜபுரம், பொட்டல்களம் உள்ளிட்ட பகுதிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜயின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு 10 ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.தமிழக வெற்றிக் கழகம் சார்பில் முருகப்பா சூர்யா தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசு தொடக்கப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கும், பொதுமக்களுக்கும் உணவு வழங்கப்பட்டது. மீனாட்சிபுரம், துரைராஜபுரம், பொட்டல்களம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் அன்னதானம் பெற்றனர். நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டனர்.



# அலவாக்கோட்டையில் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கல்

சிவகங்கை, ஜூன்.24-

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட அலவாக்கோட்டை ஊராட்சியில், தமிழ்நாடு முதலமைச்சர் சி. ஜோசப் விஜயின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அலவாக்கோட்டை, நடுஅம்மச்சிபட்டி மற்றும் அலைமுத்துப்பட்டி பகுதிகளில் இயங்கி வரும் தொடக்கப்பள்ளி மற்றும் அங்கன்வாடி மைய குழந்தைகளுக்கு 10 பொருட்கள் அடங்கிய கல்வி உபகரணத் தொகுப்புகள் வழங்கப்பட்டன.மேலும், மாணவர்களுக்கு துணிப்பைகள் வழங்கப்பட்டு, பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டை தவிர்க்கும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கு குப்பைத்தொட்டிகளும் வழங்கப்பட்டு, சுற்றுச்சூழல் தூய்மையை பேணுவது குறித்து அறிவுறுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள், மகளிரணி, இளைஞரணி நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# நூல் விலை ரூ.5 உயர்வு, இனி வாரம் தோறும் நூல் விலை நிர்ணயம்

திருப்பூர்: ஜூன்.24-

பஞ்சு இறக்குமதி வரிக்கு விலக்கு அளிக்கப்பட்டதால், விலை குறைந்தது. நூல் விலையும், கடந்த 1 மற்றும் 15ம் தேதிகளில், கிலோவுக்கு தலா, 10 ரூபாய் குறைந்தது. விலை மேலும் குறையும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், ஐந்து ரூபாய் உயர்ந்துள்ளது.

இந்தத் தொடர் விலையேற்றம் காரணமாகத் நூல் விலையை கிலோவுக்கு ரூ.5 உயர்த்தி நூற்பாலைகள் அறிவித்துள்ளது. நடப்பு மாதத்தில் மட்டும் 3வது முறையாக நூல் 5 விலையை உயர்த்தி நூற்பாலைகள் அறிவித்துள்ளது. பஞ்சு விலை தினமும் மாறுபடுவதால் நஷ்டத்தை தவிர்க்கும் வகையில், வாரம் தோறும் நூல் விலை நிர்ணயம் செய்ய முடிவு செய்துள்ளோம் என்று நூற்பாலைகள் உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர்.

**BEFORE THE REVENUE DIVISIONAL OFFICER, COONOOR**

Mrs.PRIYADARSHANI BEHERA, W/o. Vinoth Alexander, Door No;6/536,Riffle Range, Kotagiri, The Nilgiris.

- PETITIONER

VS

Tahsildar, Kotagiri.

- RESPONDENT

NOTICE

TO WHOM SO EVER IT MAY CONCERN PLEASE TAKE NOTICE THAT Mrs.PRIYADARSHANI BEHERA, W/o.Vinoth Alexander, Petitioner has filed a petition under section 13(3) of Birth and Death Act 1969 before the Tahsildar, Kotagiri for the registration of the Birth of the petitioner's daughter namely RACHEL.V, D/o Vinoth Alexander Birth on 16/06/2018,at 6/536 Riffle Range, Kotagiri, in the District of the Nilgiris for any objections if any

**ADVOCATE FOR THE PETITIONER**
**P.NAGADEVI.B.A., LAW LLB,**
**COONOOR - 2**
**COONOOR**
**DATE : 24/06/2026**

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161